07. "விசேட தேவைகளையுடைய பிள்ளைகள்" எனப்படுவோர் யாவர்? தேவைகளை நிறைவேற்றுவதில் ஆசிரியரின் பணிகளைப் பட்டியலிடுக.

08. பின்வருவனவற்றுள் நான்கு பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) சிந்தனை விருத்தியும் தொடர்பாடலும்
(ஆ) ஞாபகமும் புலக்காட்சியும்
(இ) நுண்ணறிவை அளவிடல்
(ஈ) மொழி விருத்திக்கான காரணிகள்
(உ) பிள்ளை வளர்ச்சியில் ஆசிரியர் பங்கு

(5 x 20 = 100 புள்ளிகள்)

*************

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I (வெளிவாரி) – 2005/2006
## (ஏப்ரல் 2008)

## EDU 201 பிள்ளையின் அபிவிருத்தியையும் கற்றலையும் விளங்கிக் கொள்ளல்

LIBRARY
30 MAY 2008
Eastern University, Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. கற்றல் கற்பித்தலில் பிள்ளைகளை விளங்கிக் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு பிள்ளையின் கற்கை முறைகள் இரண்டை விளக்குக.

02. (அ) பிள்ளை வளர்ச்சியின் பிரதான கட்டங்களையும் அவற்றின் பண்புகளையும் தருக.

(ஆ) பிள்ளை வளர்ச்சியில் பரம்பரையும், சூழலும் பெறும் முக்கியத்துவங்கள் யாவை என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

03. (அ) கற்றல் கற்பித்தலில் மாணவர்களை ஈடுபடுத்த ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் எவை?

(ஆ) நீர் கற்ற கற்றல் கொள்கை ஒன்றில் கற்றல் நிகழும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

04. ஆளுமை என்பதை வரைவிலக்கணஞ் செய்க. சமநிலை ஆளுமையை ஏற்படுத்துவதில் செல்வாக்குப் பெறும் காரணிகளை ஆராய்க.

05. கற்றல் இடமாற்றம் தொடர்பாகப் பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.
   i. கற்றல் இடமாற்றக் கோட்பாடுகள்
   ii. கற்றல் இடமாற்றத்தில் ஆசிரியர் பங்கு
   iii. கலைத்திட்ட விருத்தியில் கற்றலிடமாற்றம்
   iv. கற்றல் இடமாற்றத்தில் செல்வாக்குடைய காரணிகள்

06. (அ) கற்றல் கற்பித்தலில் ஊக்கல் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(ஆ) ஊக்கல் பற்றி மாஸ்லோ முன்வைத்த கொள்கையை சுருக்கமாகத் தருக.